# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - வளர்நிலை 3

சுட்டெண்:........................................................ நேரம்: 90 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

எ-கா: தமிழ்மொழி தொன்மையானது. தொன்மை என்றால் பழைமை
(புதுமை, பழைமை, இனிமை)

1. உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் ____________.
(திருக்குறள், நல்வழி, மணிமேகலை )

2. கதிர்காமநாயகம் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட வன்னி மன்னன் ____________.
(சங்கிலியன், பண்டாரவன்னியன், சோழன்)

3. அதியமான் காட்டில் ____________ க் கண்டான்.
(மாமரத்தைக், புளியமரத்தைக், கருநெல்லிமரத்தைக்)

4. நரி ஊஊ என்று ____________ க் கொண்டு ஓடியது.
(ஊளையிட்டுக், கனைத்து, முழங்கி)

5. தமிழருடைய வீரத்தைக் கூறும் நூல் ____________
(புறநானூறு, அகநானூறு, திருக்குறள் )

6. அடங்காப்பற்று என்று ____________ அழைத்தனர்.
(கண்டியை, வன்னியை, கொழும்பை)

7. நாம் பிறருடைய பொருளை எங்காவது கண்டால் ____________ சேர்க்க வேண்டும்.
(அப்பாவிடம், நண்பனிடம், உரியவரிடம்)

8. நட்புக்கு எதிர்ச்சொல் ______________.
( எதிர், பகை, சினம் )

9. தமிழருடைய பண்பாட்டு வரலாற்றைக் கூறும் நூல் ______________.
( சிலப்பதிகாரம், பவளக்கொடி, புறநானூறு )

10. தமிழ் எழுத்து ______________ மிகவும் பழைமையானது.
( வலக்கு, வளக்கு, வழக்கு )

11. நாம் மார்கழி மாதத்தில் ______________ விழாவைக் கொண்டாடுவோம்.
( தைப்பொங்கல், நத்தார், ஆடிப்பிறப்பு )

12. 900 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .
( தொள்ளாயிரம், தொளாயிரம், தெள்ளாயிரம் )

13. இயல் இசை நாடகம் என்பது ______________ எனப்படும்.
( பைந்தமிழ், நல்ல தமிழ், முத்தமிழ் )

14. எழிலியால் அஞ்சல் ______________.
( அனுப்பப்பட்டது, அனுப்பினாள், அனுப்புவாள் )

15. ஒளி என்ற சொல்லின் எதிர்கருத்துச் சொல் ______________
( பகல், வெளிச்சம், இருள் )

16. ______________ சந்தைக்குச் சென்றாய். நீங்கள் சந்தைக்குச் சென்றீர்கள்.
( நீ, நீர், நீங்கள் )

17. பலாப்பழம் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால் ______________
( பலா + பழம், பலாப் + பழம், பலா + ப்பழம் )

18. பனிக்கரடிகள் வெள்ளையாகக்______________ என இருக்கும்.
( மளமளவென, கொழுகொழுவென, பளபளவென )

19. எவருடனும் பணிவுடன் பழகுவது ______________
( தெளிவு, பணிவன்பு, வீரம்)

20. கன்னியா குமரியில் ______________ சிலை உள்ளது.
( பாரதி, வள்ளுவர், ஔவையார்)

(20 புள்ளிகள்)

2) உறுப்பமைய எழுதுக.

எமது பண்பாட்டு நூல் சிலப்பதிகாரம்.

______________________________________________

எமது மொழி செம்மொழியாகிய தமிழ்மொழி.

______________________________________________

(புள்ளிகள் 05)

3) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேர்ந்து | திருந்தச் | கிளைகள் | ~~விருந்தோடு~~ | நெருங்கிய | கொடுத்தான் |

எ+கா:- உண்டிக்கு அழகு விருந்தோடு உண்ணல்.

1. சேந்தனும் மைந்தனும் ________________ நண்பர்கள்.
2. சோழன் எப்போதும் மற்றவர்களுடன் ________________ விளையாடுவான்.
3. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனியைக் ________________.
4. பனைமரத்திற்கு ________________ இல்லை.
5. செய்வன ________________ செய்.

(புள்ளிகள் 05)

## 4) ஒழுங்குபடுத்தி எழுதுக.

எ-கா:-

பழைமை / வாய்ந்த / நூல்கள் / உள்ளன / தமிழில்

தமிழில் பழைமை வாய்ந்த நூல்கள் உள்ளன.

1. தமிழ் / உயிரைத் / மோசிகீரனாரின் / காப்பாற்றியது

______________________________.

2. ஆடுவாள் / நடனம் / நன்றாக / பூங்குழலி

______________________________.

3. தாமரைப்பூ / இருக்கிறது / மலர்ந்து / அழகாக

______________________________.

4. பந்து / விளையாடினாள் / நங்கை / மகிழ்ச்சியாகப்

______________________________.

5. செய்யப்படும் / விளைந்த / அறுவடை / நெல்

______________________________.

(புள்ளிகள் 10)

## 5) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பள்ளிப் | எடுத்து | ~~தனது~~ | நண்பர்களுடன் | பேருந்துத் | பள்ளிப்பையைத் |

எ-கா: மகிழன் தமிழ்ப்பள்ளி செல்வதற்காகத் தனது பள்ளிப்பையை எடுக்கிறான். அதில் ______________ பாடத்துக்குத் தேவையான பொருட்கள் யாவும் இருக்கும் என எண்ணுகிறான். வீட்டிலிருந்து நடந்து சென்று, ______________ தரிப்பிடத்தை அடைகிறான். அங்கு நின்று கொண்டிருந்த தனது ______________ சேர்ந்து தனது பள்ளிக்குச் செல்கிறான். தனது வகுப்பில் ______________ திறந்த போது பாடத்துக்கு வேண்டிய பாடநூலை ______________ வரவில்லை என்பதை உணர்கிறான்.

(புள்ளிகள் 05)

6) சொற்களைக் கண்டறிந்து வட்டமிட்டு பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வி | யா | ழ | ன் | | வெ |
| கா | பு | ர | ட் | டா | தி | ள் |
| ர் | த | மா | சி | வை | ப | ளி |
| த் | ன் | ர் | | கா | ங் | ஞா |
| தி | ங் | க | ள் | சி | கு | யி |
| கை | | ழி | | ச | னி | று |

**மாதங்கள்**

எ+கா:- புரட்டாதி

**நாட்கள்**

புதன்

(புள்ளிகள் 10)

**7.) கீறிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க.**

எ-கா:- மரம் சரிந்து <u>விழுந்தது</u>.

1. எமது தமிழ்மொழியை நாம் பேசப் பழக __________________.
2. மழை பெய்ததால் அவன் குடையை எடுத்துச் __________________.
3. தமிழினியால் ஓவியம் __________________.
4. பறவைகள் வானத்தில் __________________.
5. தமிழ் வகுப்பு எத்தனை மணிக்குத் __________________

(புள்ளிகள் 10)

**8) கீறிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழுத | செய்து | ~~எழுதிய~~ | உண்டு | வரைந்த | நடந்து |

எ-கா:- இளங்கோவடிகள் <u>**எழுதிய**</u> சிலப்பதிகாரம் ஒரு மிகச் சிறந்த இலக்கியம்.

1. சிறுவன் பள்ளிக்கு __________________ சென்றான்.
2. குந்தவை __________________ ஓவியம் அழகாக இருந்தது.
3. பசியால் __________________ பிள்ளை பால் குடித்தது.
4. குயிலன் வீட்டுப் பாடங்களை மளமள எனச்__________________ முடித்தான்.
5. விருந்தினர் உணவு __________________ மகிழ்ந்தனர்.

(புள்ளிகள் 10

9) **பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன் சங்கிலியன். இவன் சிறந்த வீரன். நாட்டின் மீது பற்றுள்ளவன். ஐரோப்பாவிலிருந்து வந்த போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க பலமுறை முயன்றனர். ஆனால், சங்கிலியனை வெற்றி கொள்ள முடியவில்லை. இறுதியில் காக்கைவன்னியன் என்ற இரண்டகனைப் போர்த்துக்கேயர் நாடினர். காக்கைவன்னியனால் சங்கிலியன் காட்டிக் கொடுக்கப்பட்டான். அவன் செய்த சூழ்ச்சியால் சங்கிலியன் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டான்.

எ-கா: சங்கிலியனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன் யார்?

சங்கிலியனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன் காக்கைவன்னியன்.

1. சங்கிலியன் யாரால் கொல்லப்பட்டான்?

________________________________________

________________________________________

2. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னன் யார்?

________________________________________

________________________________________

3. போர்த்துக்கேயர் எங்கிருந்து வந்தனர்?

________________________________________

________________________________________

4. சங்கிலியன் எப்படிப்பட்டவன்?

________________________________________

________________________________________


5. சங்கிலியனை வெற்றி கொள்ள போர்த்துக்கேயர் யாரை நாடினர்?

________________________________________

________________________________________

(புள்ளிகள் 10)

10) படத்தைப் பார்த்து, ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



(புள்ளிகள் 15)